**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.774/2015

பி.வா.சா.1 வசந்தி

**<u>குறுக்குவிசாரணை தொடர்ச்சி வாதிகள் தரப்பில்:-</u>**

இந்த வழக்கில் தரப்பினர்களுக்குள் உள்ள உறமுறை பற்றி சொல்லியுள்ளதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. தாதா ராமசாமிகவுண்டருக்கு பூந்துறை சேமூர் கிராமத்திலுள்ள சொத்துக்களை தவிர வேறு கிராமத்திலோ, வேறு சொத்துக்களோ கிடையாது என்றால் சரிதான். 09.08.1927 தேதியில் ராமசாமிகவுண்டரும், அவரது சகோதரர் குழந்தைசாமியும் பி.தா.சா.ஆ 1 ப்படி பாகப்பிரிவினை செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். பி.தா.சா.ஆ.1 பாகப்பிரிவினைப்படி ஏ அட்டவணை சொத்துக்கள் குழந்தைசாமிக்கும், பி அட்டவணை சொத்துக்கள் எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். குழந்தைசாமிகவுண்டர் இறந்த பிறகு அவருக்கு ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்துக்களை அவரது வாரிசுதாரர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தில் எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கு அந்த பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்தாக பூந்துறை சேமூர் கிராமத்திலும் வெண்டிபாளையம் கிராமத்திலும் சொத்துக்கள் பிரிந்ததா என்றால் பூந்துறை சேமூர் கிராமத்தில் பிரிந்தது. வெண்டிபாளையம் கிராமத்தில் பிரிந்தது எனக்கு தெரியாது. பி.தா.சா.ஆ.1 சான்றாவணத்தை நான் படித்து பார்த்திருக்கிறேன். அதில் வெண்டிபாளையம் கிராம சொத்து பி அட்டவணையில்

காட்டப்பட்டிருக்கிறது என்றால் இல்லை. வெண்டிபாளையம் கிராமத்தில் இருந்த சொத்துக்களை எனது தாத்தா ராமசாமி கவுண்டரே விற்பனை செய்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1927 ல் எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கு பூந்துறை சேமூர் கிராமத்தில் எத்தனை ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் 6 ஏக்கர் 30 செண்ட்



ஒதுக்கப்பட்டது. அந்த 6 ஏக்கர் 30 செண்டிற்கும் பழைய, புதிய சர்வே எண்கள் சொல்ல முடியுமா என்றால் புதிய சர்வே எண்.432 ஆகும். பழைய சர்வே எண் தெரியாது. பாகப்பிரிவினையில் பி அட்டவணை சொத்தாக பூந்துறை சேமூர் கிராமம் ப.க.ச.எண்.290, 291 மற்றும் 297 ல் எனது தாத்தா ராமசாமிகவுண்டர் விற்பனை செய்திருக்கிறாரா என்றால் எனது தாத்தா விற்பனை செய்யவில்லை. எனது தாத்தா ராமசாமிகவுண்டருக்கு கனகபுரம் ஊரில் சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி சாமியாத்தாளும், நானும் வாதியாக இருந்து ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.432/2014 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி 1, 3, 5 பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்திருந்தோமா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் அ.வ.எண்.432/2014 க்குண்டான வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **வ.த.சா.ஆ.15** ஆகும். ராமசாமிகவுண்டருக்கு பிரிந்த சொத்துக்களைத் தான் நாங்கள் அ.வ.எண்.432/2014 ல் வழக்கு சொத்தாக காட்டியிருக்கிறோம் என்றால் இல்லை. என் அப்பாவிற்கு பிரிந்த சொத்துக்களைத் தான் அதில் காட்டியிருக்கிறோம். எனது தாத்தா ராமசாமிக்கவுண்டர் இறந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் அது எனக்கு தெரியாது நான் சிறுவயதாக இருக்கும் போது இறந்துவிட்டார். எனது பெரியப்பா சுப்பராயக்கவுண்டர் இறந்தும் சுமார் 50 வருடம் இருக்கும் என்றால் இருக்கும். சுப்பராயக்கவுண்டரும், எனது அப்பாவும் சொத்துக்களை எழுத்து மூலமாக பிரித்துக்கொண்டார்களா என்றால் எழுத்து மூலமாக பிரித்துக்கொள்ளவில்லை ஆனால் எனது தாத்தா இருக்கும்போதே வாய்மொழியாக பிரித்துக்கொடுத்துவிட்டார். நாங்கள் போட்ட அ.வ.எண்.432/2014 ல் சுப்பராயக்கவுண்டரும், எனது அப்பாவும் சொத்துக்களை எனது தாத்தா இருக்கும்போதே வாய்மொழியாக பிரித்துக்கொடுத்துவிட்டார் என்ற விவரத்தை சொல்லியிருக்கிறோமா

என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு சுப்பராயக்கவுண்டர் என்ற சகோதரர் இருக்கிறார் என்ற விவரத்தை கூட அந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 வது பிரதிவாதியான எனது சகோதரி சாமியாத்தாள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையைத் தான் 3 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். அந்த



எதிர்வழக்குரை விவரம் எனக்கு தெரியும். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பத்தி 8 ல் ராமசாமிக்கவுண்டருக்கு எனது அப்பா குழந்தைசாமியான 1 ம் பிரதிவாதி மட்டுமே ஒரே மகன் என்று சொல்லியிருக்கிறோம் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. ராமசாமிக்கவுண்டர் இறந்தபிறகு எனது தந்தை குழந்தைசாமியும், 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆகிய நாங்களும் தான் தாவா சொத்துக்கு உரிமையாளர்கள் என்று சொல்லியிருக்கிறோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.432/2014 ல் உள்ள வழக்கு சொத்தும், இந்த வழக்கு சொத்தும் ஒன்றா என்றால் ஆமாம். இரண்டு வழக்கு சொத்துக்களும் ஒன்று என்பதால் சுப்பராயக்கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். சுப்பராயக்கவுண்டருக்கு பிரிந்த சொத்துக்களை அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். இந்த வழக்கில் 9 முதல் 12 பிரதிவாதிகள் சுப்பராயக்கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். சுப்பராயக்கவுண்டருக்கு எந்தெந்த கிராமத்தில் எவ்வளவு சொத்துக்கள் பிரிந்தது என்றால் பூந்துறை சேமூர் கிராமத்தில் 3 ஏக்கர் பிரிந்தது. அதன் சர்வே எண் தெரியாது. சுப்பராயக்கவுண்டருக்கு பிரிந்த சொத்துக்கள் இந்த வழக்கு சொத்திற்கு ஒட்டியே அமைந்துள்ளதா அல்லது வேறு பகுதியில் உள்ளதா என்றால் ஒட்டியே இணை பொழியில் தான் அமைந்துள்ளது. இதுபோன்று நான்கு இடங்களில் அமைந்துள்ளது. அந்த நான்கு இடத்திலுள்ள சொத்துக்களை பற்றி இந்த வழக்கில் சொல்லியுள்ளார்களா இல்லையா என்ற விவரம் தெரியுமா என்றால் அவர்களது சொத்துக்களை சொல்லவில்லை எங்களது சொத்துக்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள். சுப்பராயக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட அந்த நான்கு இடத்திலுள்ள சொத்துக்களும் இந்த வழக்கில் சொல்லியுள்ள சர்வே எண்ணில் தான் இருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கு சர்வே எண்ணில் சொல்லியுள்ள சொத்தின்

விஸ்தீரணம் குறைவாக இருந்தால் அந்த விஸ்தீரணத்தையும் சுப்பராயக்கவுண்டர் சொத்தையும் சேர்த்து கொள்வதில் ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.15 ஆனது 2014 ல் நாங்கள் வழக்கு போடும் வரை சொத்துக்கள் பிரிவினையாகாமல் பொது சொத்தாக இருந்ததா என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் தனது சகோதரிகளுக்கு மட்டும் பொதுவாக இருப்பதாக சொல்கிறார். நாங்கள்



2014 ல் வழக்கு போடும் வரை சொத்துக்கள் ராமசாமிகவுண்டர் பெயரில் தான் வருவாய்த்துறை ஆவணங்கள் இருந்தது என்றால் இல்லை எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது. இந்த வழக்கை வாதிகள் 2015 ல் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம். 1927 ல் ராமசாமிக்கவுண்டருக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை கிடைத்த பிறகு அவர் சொத்துக்கள் எதையும் கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், எனது பெரியப்பா சுப்பராயக்கவுண்டரும் சேர்ந்து சொத்துக்கள் எதையும் வாங்கவில்லை. 11.11.1972 தேதியில் எனது அப்பாவும், எனது பெரியப்பாவின் மகன்களுடன் சேர்ந்து பூந்துறை சேமூர் கிராமத்தில் 1 ஏக்கர் 4 செண்ட் வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார். அதில் ஆளுக்கு பாதி பாத்தியம். அந்த 1 ஏக்கர் 4 செண்டானது 33 செண்ட் ஒரு தாக்காகவும், 71 செண்ட் ஒரு தாக்காகவும் உள்ளது என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **வா.த.சா.ஆ.16** ஆகும். வா.த.சா.ஆ.16 ல் கண்டுள்ள சொத்துக்களில் இந்த வாதிகளுக்கோ, 6, 7 பிரதிவாதிகளுக்கோ பாத்தியம் இருக்கிறதா என்றால் இல்லை. சுப்பராயக்கவுண்டரின் மகன்கள் 14.09.1990 தேதியில் கனகபுரம் கிராமத்தில் சொத்துக்கள் வாங்கியிருக்கிறார்களா என்றால் வாங்கவில்லை. 14.09.1992 தேதியில் சுப்பராயக்கவுண்டரின் மகன்கள் பூந்துறை சேமூர் கிராமத்தில் 1 ஏக்கர் 33 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறார்களா என்றால் ஆமாம். அந்த 1 ஏக்கர் 33 செண்ட் இந்த வழக்கு சொத்துடன் சேர்ந்து இல்லை அது தனியாக உள்ளது. அந்த 1 ஏக்கர் 33

செண்டில் வாதிகளுக்கோ, 6, 7 பிரதிவாதிகளுக்கோ பாத்தியம் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது.

**(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**